# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2024/44 - 2017 ජුනි මස 23 වැනි සිකුරාදා - 2017.06.23

*2024/44 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத் துறை சார்ந்த உத்தியோகத்தர்களினது இணைந்த சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் முதலாவது திருத்தம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1986/2 மற்றும் 2016.09.26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத் துறை சார்ந்த உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழ் குறிப்பிடப்பட்டவாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2017, ஏப்பிறல் 25.*

| தொடர் இல. | பந்தி இல. | திருத்தியமைக்கப்படும் முறை |
|---|---|---|
| 01 | 2.1.1<br>8.1<br>10.1<br>10.2<br>13.3 | "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு3 சேவை வகுதி" எனக் குறிப்பிடப்பட்ட சகல இடங்களும் "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 2 சேவை வகுதி" என மாற்றியமைக்கப்படல் வேண்டும். |
| 02 | 7. 2. 3. 2. 4 (II) | அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய தகைமைகளைப் பரிசீலனை செய்யும் தினத்திற்கு முன்னரான (08) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனைவிட உயரிய செயலாற்றுகையைக் காண்பித்திருத்தல். |
| 03 | 14(I) | (அ) தற்போது MNI-2016 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிமையுள்ள விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் 10 ஆண்டுகளுக்கு மேற்படாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் MT-2-2016 சம்பள அளவுத்திட்டத்தின் III ஆம் தரத்திற்கும், |



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(தொடர்ச்சி)

| தொடர் இல. | பந்தி இல. | திருத்தியமைக்கப்படும் முறை |
|---|---|---|
| | | (ஆ) தற்போது MNI-2016 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிமையுள்ள விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் பதவியில் 10 ஆண்டுகளுக்கு குறையாத மற்றும் 20 வருடங்களுக்கு மேற்படாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் MT-2-2016 சம்பள அளவுத்திட்டத்தின் II ஆம் தரத்திற்கும்,<br>(இ) தற்போது MNI-2016 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிமையுள்ள விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் பதவியில் 20 ஆண்டுகளுக்கு குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் MT-2-2016 சம்பள அளவுத்திட்டத்தின் I ஆம் தரத்திற்கும்,<br>உள்ளீர்ப்புச் செய்யப்படுவர். |
| 04 | 14(II) | (அ) தற்போது MN3-2016 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிமையுள்ள விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவியில் 10 ஆண்டுகளுக்கு மேற்படாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் MN3-2016 சம்பள அளவுத்திட்டத்தின் III ஆம் தரத்திற்கும்,<br>(ஆ) தற்போது MN3-2016 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிமையுள்ள விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவியில் 10 ஆண்டுகளுக்கு குறையாத மற்றும் 20 வருடங்களுக்கு மேற்படாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் MN3-2016 சம்பள அளவுத்திட்டத்தின் II ஆம் தரத்திற்கும்,<br>(இ) தற்போது MN3-2016 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிமையுள்ள விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவியில் 20 ஆண்டுகளுக்கு குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் MN3-2016 சம்பள அளவுத்திட்டத்தின் I ஆம் தரத்திற்கும்,<br>உள்ளீர்ப்புச் செய்யப்படுவர். |
| 05 | இணைப்பு 05.1 | பரீட்சை தொடர்பான விபரங்கள் : (விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தரம் II இற்கு பதவி உயர்வுபெற்று 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர்) |
| 06 | இணைப்பு 06.1 | பரீட்சை தொடர்பான விபரங்கள் : (விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தரம் I இற்கு பதவி உயர்வுபெற்று 05 வருடங்கள் கழிவதற்கு முன்னர்) |
| 07 | அட்டவணை 01 | **நிலைய விளையாட்டு உத்தியோகத்தர் :**<br>1. விளையாட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்குப் பொறுப்பாகச் செயற்படல்.<br>2. பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் தொடர்பான மேற்பார்வை.<br>3. பயிற்சி நிலையங்களுக்குரிய ஏனைய பொருட்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள்.<br>4. பொருள் பட்டியல் புத்தகத்தைச் சமநிலைப்படுத்திப் பேணல்.<br>5. பயிற்சி நிலையங்களின் விளையாட்டு மைதானங்களினது தொழில்நுட்ப தேவையினை நிவர்த்தி செய்தல்.<br>6. சகல பயிற்சி நிலையச் செயற்பாடுகள் தொடர்பாகவும் முன்னேற்ற அறிக்கையினைச் சமர்ப்பித்தல். |

(தொடர்ச்சி)

| தொடர் இல. | பந்தி இல. | திருத்தியமைக்கப்படும் முறை |
|---|---|---|
| | | 7. உதவி விளையாட்டுப் பணிப்பாளர்களின் அங்கீகாரத்தின் கீழ் மாகாண விளையாட்டுத் துறை அமைச்சு, உள்ளூராட்சி அமைச்சு, தேசிய இளைஞர் சேவை மன்றம் அல்லது ஏனைய அரச அல்லது அரச சார்பற்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் விளையாட்டுச் செயற்திட்டம் தொடர்பான மேற்பார்வை.<br>8. தம்மால் ஒருங்கிணைப்புச் செய்யப்படும் விளையாட்டினை நாடு பூராகவும் விரிவாக்க மற்றும் அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல் மற்றும் பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.<br>9. திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை இனங்காணும் வேலைத்திட்ட ஒழுங்குகளை வகுத்தல்.<br>10. விளையாட்டுத்துறைக்குரிய தகவல்கள் அடங்கிய தரவுத் தொகுதியினை வகுத்தல், (உட்கட்டமைப்பு வசதிகள், வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள், நடுவர்கள் தொடர்பாக மற்றும் விளையாட்டு வீரர்களின் வெற்றிகள் மற்றும் திறமைகள் தொடர்பாக)<br>11. ஏற்புடைய விளையாட்டினது அபிவிருத்திக்காக வலிளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.<br>12. விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் விடய அறிவினை நாளதுவரைப்படுத்துவதற்காக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் பயிற்சி வேலைத்திட்டம் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல்.<br>13. ஏற்புடைய விளையாட்டுக்காக மாவட்ட குழாம்களுக்கிடையே போட்டிகளை நடாத்துதல்.<br>14. தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனத்துடனான ஒருங்கிணைப்புக்கள், ஆலோசனைகளை மற்றும் மேற்பார்வை<br>15. விளையாட்டுத் துறை அமைச்சின் விளையாட்டுக் குழாமை முன்னெடுத்தல் மற்றும் அதன் மூலம் தேசிய குழாமை ஊக்குவித்தல்.<br>16. தேசிய விளையாட்டு விழாவின் உரிய போட்டிகளை ஒழுங்குசெய்தல்.<br>17. மாகாண விளையாட்டுத்துறை அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய இளைஞர் சேவை மன்றம் அல்லது ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நடாத்தப்படும் வேலைத்திட்டங்களின்போது தேவையான உதவியினை வழங்குதல்.<br>18. விளையாட்டுத் துறை அமைச்சின் தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக வருடாந்த நாட் காட்டிகளைத் தயாரித்தல்.<br>19. தேசிய மட்டத்தில் விளையாட்டுப் பயிற்சி முகாம்கள் மற்றும் ‘கிரீடா சக்தி’ செயற்திட்டத்திற்குரிய கருத்தரங்குகளை தேர்ந்தெடுக்கும் வேலைத்திட்டங்களை வகுத்தல்.<br>20. விளையாட்டுத் துறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் கருத்தரங்குகள் தொடர்பான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.<br>21. சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் உள்நாட்டு விளையாட்டுக் குழுக்கள் மற்றும் போட்டிகளுக்காக பங்கேற்க வருகை தரும் உள்நாட்டு வெளிநாட்டு விளையாட்டுக் குழுக்களை வரவேற்கும் வேலைத்திட்டங்களை வகுத்தல். |

07-133

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.